රාජ්‍ය පරිපාලන සහ ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND HOME AFFAIRS
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
Website : www.pubad.gov.lk

දුරකථන / தொலைபேசி : / Telephone (94) 011-2696211-13
ෆැක්ස් / பெக்ஸ் : / Fax (94) 011-2695279
ඊ මේල් / இ-தபால் : / E - mail sas_hrd@pubad.gov.lk

මගේ අංකය / எனது இல : / My No COM/2/TRANS/03/0015
ඔබේ අංකය / உமது இல : / Your No
දිනය / திகதி : / Date 2009.10.26

அரச அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்/ மாவட்ட செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள் யாவருக்கும்,

**2010 வருடாந்த இடமாற்றங்கள் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை (இணைந்த சேவை)**

இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடும் இடமாற்றங்களை 2010.01.01 ஆந் திகதி அல்லது அலுவலர்களின் பெயர்களுக்கு முன்னால், குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் அனுமதிக்கின்றேன். (சுனாமி அனர்த்தம் காரணமாக நீடிக்கப்பட்ட இடமாற்றத் திகதிகளுக்குரிய அலுவலர்களின் விடயத்தில் மட்டும் அவர்களின் பெயர்களுக்கு முன்னால் நடைமுறைப்பட வேண்டிய திகதிகள் குறிக்கப்பட்டுள்ளன.) இது தொடர்பாக அமைச்சு/ திணைக்களம் என்பவற்றில் உள்ள அலுவலர்களுக்கு அறிவிப்பதுடன் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்குச் சமூகமளிக்கும் படியும் அறிவிக்கவும். அரசாங்க சேவை ஆணைக்குழு/ இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு புலனாய்வு ஆணைக்குழு/ தேர்தல் திணைக்களம் ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் பெற்ற அலுவலர்களின் இடமாற்றங்கள் நிறுவனத் தலைவரின் இணக்கத்திற்கு அமைய நடைமுறைப்படுதல் வேண்டும்.

02. தற்போது பணியாற்றும் சேவை நிலையத்தில் உரிய காலத்தை பூர்த்தி செய்திராத அலுவலர்களுக்கு இவ் வருடாந்த இடமாற்றங்களுக்கான பிரயாணச் செலவு செலுத்தப்பட மாட்டாது. தற்போது சேவையாற்றும் இடத்தில் உரிய காலத்தை பூர்த்தி செய்திருக்கும் அலுவலர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பிரயாணச் செலவு செலுத்தல் வேண்டும். ஜீவனோபாய படி செலுத்தப்பட மாட்டாது.

03. இணைந்த சேவைகளின் இடமாற்ற கட்டளைகளுக்கு அமைய எவரேனும் அலுவலருக்கு தங்களது அமைச்சு/ திணைக்களம் ஆகியவற்றில் அமைக்கபபட்டுள்ள உள்ளக இடமாற்ற சபைகளாலும் உள்ளக இடமாற்றங்களுக்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின், அதன் போது இணைந்த சேவைகள் இடமாற்ற கட்டளைகள் செயற்படுதல் வேண்டும். ஆயினும் அலுவலர்களின் வேண்டுகோளுக்கு அமைய அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் என்பவற்றின் தேவைக்கேற்ப அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கியுள்ள இடமாற்ற கட்டளைகள் நடைமுறைப்பட வேண்டுமென தாங்கள் கருதுவதாக இருந்தால் பந்தி 07 இல் குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்னர் தங்களது பரிந்துரைகளுடன் சம்பந்தப்பட்ட வேண்டுகோளுக்கான காரணத்தை எனக்கு அறிவித்து மேலதிக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

04. இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது இடமாற்ற குழுக்களால் கடைபிடிக்கப்பட்ட இடமாற்ற திட்டம் 2009.06.22 ஆந் திகதிய இடமாற்ற சுற்று நிருப இல. 02/2009 தற்போதைக்கும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இடமாற்ற கட்டளைகளை, இடமாற்றங்கள் கோரியிருந்த சகல அலுவலர்களும் அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

05. இந்த இடமாற்ற கட்டளைகளுக்கு அமைவாக அலுவலர் ஒருவருக்கான இடமாற்றம் 2009.12.31 ஆந் திகதி வரை பிற்போடப்பட்டிருந்தால் இதற்கு முன்னர் என்னால் வழங்கப்பட்ட இடமாற்ற கட்டளைகள் இருப்பின், அவ்வாறான அலுவலர் ஒருவருக்கு மீளவும் 2010 வருடாந்த இடமாற்ற கட்டளைகள் மூலம் வேறு இடமாற்ற கட்டளை வழங்கி இருப்பின் அதன் போது முன்னர் வழங்கிய இடமாற்ற கட்டளைகள் வலுவற்றதாகி விடும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

06. இந்த இடமாற்ற திடடத்தில் அல்லது இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இல. 02/2009 அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க அதி விசேட வர்தமான பத்திரிகையின் செயற்திட்ட விதிகளிள் (தொகுதி இலக்கம் 1) அத்தியாயம் XVIII இன் ஏறபாடுகளுக்கு அமைய தமது இடமாற்ற கோரிக்கைகளின் மீது வருடாந்த இடமாற்ற குழு கவனத்தில் கொள்ளவில்லையெனில் மட்டும் அதன் பிரகாரம் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும்.

07. மேன் முறையீட்டு விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப்படிவமொன்று பிற்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேன்முறையீடுகள் தொடர்பாக கருத்தில் கொள்வதற்கு அம் மாதிரி படிவத்திற்கமைய தயாரித்த விண்ணப்பபடிவங்களை எனக்கு அனுப்பி வைக்கும்படி அறியத் தருவதுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2009.11.10 ஆம் திகதி என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன். அன்றைய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாதென்பதையும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

08. உங்கள் அமைச்சு/ திணைக்களம் என்பவற்றில் இருந்து வெளி இடங்களுக்கு இடமாற்றங்கள் வழங்கி இருக்கும் அலுவலர்களை பதிலாள் வரும் வரை தாமதிக்காது உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்க கூடியவாறு விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறியத் தருவதுடன் இந்த இடமாற்றங்கள் தாமதமின்றி நடைமுறைப்பட வேண்டுமெனவும் அறியத் தருகின்றேன். முறைசார் அனுமதியின்றி இந்த இடமாற்ற கட்டளைகளை மீறும் அலுவலர்கள் தொடர்பில் சுற்றறிக்கை இல. 02/2009 இல் 5.11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியுமென்பதையும் அறியத் தருகின்றேன்.

B.P.P.S. Abeygunawardhana

பி.பீ.பீ.எஸ். அபேகுணரத்ன
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

## 2010 வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீட்டு விண்ணப்பம்

அமைச்சு: ..............................................
திணைக்களம்: ......................................

| இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் – இடமாற்றப் பதிவேட்டின் உறுதிப்படுத்தும் இலக்கம்: |
|---|

(அ) அலுவலரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

01. I. அலுவலரின் முழுப் பெயர்(தெளிவான எழுத்தில்) திரு/ திருமதி/ செல்வி : ..................................................................

II. நிரந்தர முகவரி : ..................................................................................................

III. வதிவிடத்தின் முகவரி : ..................................................................................................

IV. 2010 ஆண்டில் வதிவிடம் மாறுமாயின் புதிய வதிவிடத்தின் முகவரி : ..................................................................................................

02. பதவி அ.மு.உ.சே : I/ II/ III
சேவையில் உட்சேர்ந்த திகதி :- ..............................
தரத்தில் உட்சேர்ந்த திகதி :- ...................................
பிறந்த திகதி :- ............................................
2009.12.31 திகதியில் வயது :- ..................................

| சேவை விபரங்கள் | நியமிக்கப்பட்ட திகதி | சேவைநிலையம் இருந்து/வரை |
|---|---|---|
| ......................... | ............................. | ............................................ |
| ......................... | ............................. | ............................................ |

03. தரப்பட்டுள்ள இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி/ திருத்தும்படி/ இடமாற்றமொன்றைத் தரும்படி நான் கோருகிறேன்.

04. இடமாற்றத்தைத் திருத்த வேண்டிய/ வழங்க வேண்டிய இடம் :-
அமைச்சு :-
திணைக்களம் :- பிரதேசம்:-

..............................
திகதி:.................. அலுவலரின் கையொப்பம்

(ஆ) திணைக்களத் தலைவரின் அவதானிப்புகள் :

I. அலுவலக தகவல்களின் படி மேற்போந்த விபரங்கள் சரியானவை ஆகும்.
குறிப்பிட வேண்டிய முக்கிய விடயங்கள் உள்ளன/ இல்லை
(இருக்குமாயின் கீழே குறிப்பிடவும்)
..................................................................................................

II. மேற்படி மேன்முறையீட்டுப் பத்திரம் பரிந்துரைக்கப்படுகிறது/ பரிந்துரைக்கப்படவில்லை.

திகதி :-.................. ................................................
அமைச்சுச் செயலாளர்/ திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

(தேவையற்ற பதங்களை கீறிவிடவும். முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பங்கள் மேன்முறையீட்டு சபையினால் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. கூடிய விபரங்கள் இருப்பின் மறுபக்கத்தில் குறிப்பிடவும்)